## <u>தேர்வாணையத்தின் செய்தி அறிவிப்பு</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தடய அறிவியல் துறையில் ஆய்வக உதவியாளர் பதவி மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் பதவிகளுக்கான தேர்வினை முறையே 06.05.2018 மற்றும் 11.08.2018 ஆகிய நாட்களில் நடத்தியது. தேர்வில் கலந்து கொண்ட விண்ணப்பதாரர்களின் எழுத்து தேர்வின் முடிவுகள் தேர்வாணைய வலைதளம் "www.tnpsc.gov.in"-ல் வெளியிடப்பட்டது. மேலும், விண்ணப்பதாரர்கள் ஆய்வக உதவியாளர் பதவிக்கு 04.10.2018 முதல் 12.10.2018 வரையிலும் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு 04.10.2018 முதல் 17.10.2018 வரையிலும் தங்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. தற்போது விண்ணப்பதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு <u>பதிவேற்றம் செய்வதற்கு பதிலாக</u> ஒரே நாளில் சான்றிதழ் சரிபார்த்தல் மற்றும் கலந்தாய்வு செய்வதற்காக, தடய அறிவியல் துறை ஆய்வக உதவியாளர் பதவிக்கு 16.10.2018 அன்றும், உதவி தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு 23.10.2018 அன்றும் நேரிடியாக தேர்வாணைய அலுவலகத்திற்கு {எண் 3, பிரேசர் பாலச்சாலை, வ.உ.சி நகர் பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில் சென்னை-3} அசல் சான்றுகளுடன் வருமாறு தெரிவிக்கப்படுகிறது. இதற்கான அழைப்பு குறிப்பாணை (Memorandum) தேர்வாணைய வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்விற்கான நேரம் / நாள் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்அஞ்சல் (e-mail) மூலமாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாள்:04.10.2018

செயலாளர்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
சென்னை - 600 003